# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~ 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8120321

1. District : சிவகங்கை PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு Year: 2024 FIR No.: 6/2024 Date: 29.08.2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(a) and 12
(ii) Act சட்டம்: 1988, as amended by the P.C. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from 12.08.2024 Date to : 28.08.2024
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 29.08.2024 Time : 09.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol-III Time : 09.45 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 1½ கி.மீ தெற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : 1 எண் இணை சார்பதிவகம், சிவகங்கை மற்றும் உதயம் பத்திர எழுத்தர் அலுவலகம் சிவகங்கை
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name திரு. பா. அற்புதம் (b) Father's/ Husband's Name : ஞானமுத்து
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth 52/2024 (d) Nationality இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Mason (HS-II) Indian Army Civilian service (g) Address : க.எண்: 57A, கோணாந்தி, சாக்கிள் அஞ்சல், காளையார்கோவில் வட்டம், சிவகங்கை மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. ஈ. ஈஸ்வரன், சார்பதிவாளர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், சிவகங்கை
2. திரு. கண்ணன், ஆவண எழுத்தர், சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 29.08.2024 தேதி காலை 09.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், சாக்கூர் அஞ்சல், கோளாந்தி, க.எண்.574 என்ற முகவரியைச் சேர்ந்த ஞானமுத்து மகன் திரு.அற்புதம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை 1 எண் இணை சார்பதிவக சார்பதிவாளர் திரு.ஈஸ்வரன் மற்றும் ஆவண எழுத்தர் திரு.கண்ணன் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 29.08.2024-ம் தேதி 09.45 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

A. Kannan
DSP/VACB
29/8/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.08.2024 at 10.30 hrs

Name: பெயர் அ.கண்ணன்
Rank: நிலை .....................No. எண் ..........

காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
சிவகங்கை.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.6/2024 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

பிரிவு குற்ற எண்.6/2024 u/s.7(a) and 12 of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் G.அற்புதம், த/பெ.ஞானமுத்து, க.எண்.574,கோளாந்தி, சாக்கூர் அஞ்சல், காளையார்கோவில் வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் கடந்த 28 ஆண்டுகளாக Indian Army Civilian Service-ல் Mason (HS-II) ஆக அந்தமானில் பணிபுரிந்து வருகிறேன். தற்போது நான் விடுமுறையில் எனது சொந்த ஊருக்கு வந்துள்ளேன். எனது சொந்த ஊர் காளையார்கோவில் அருகே உள்ள கோளாந்தி கிராமம் ஆகும். நான் கடந்த 25.08.2015ம் தேதி சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், அல்லூர் குரூப், கண்டங்காத்தான் கிராம சர்வே எண்.32/16ல் "அன்னையின் ஜோவென் நகர்" என்ற பெயரில் உள்ள லே அவுட்டில் 4860 சதுர அடி பரப்பளவுள்ள பிளாட் எண்.199ல் பகுதி, 200 மற்றும் 201 ஆகியவற்றை பவர் ஏஜெண்ட் திரு.C.அய்யப்பன் என்பவரிடமிருந்து கிரையமாக வாங்கினேன். இதுசம்மந்தமாக சிவகங்கை எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1528/2015ன்படி பத்திரப்பதிவு செய்தபோது, மேற்படி இடத்தின் பரப்பளவினை சரியாக குறிப்பிட்டு, பிளாட் எண்.199ல் பகுதி என்பதை குறிப்பிடாமல் பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் தற்போது மேற்படி மனையிடங்களுக்கு எனது பெயரில் பட்டா மாறுதலுக்கு ஏற்பாடு செய்யும்போது தான் பிளாட் எண்.199ல் பகுதி மேற்படி கிரைய பத்திரத்தில் விடுபட்டுள்ளதை தெரிந்துகொண்டேன். எனவே, நான் கடந்த 05.08.2024ம் தேதி சிவகங்கை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, எனது கிரைய ஆவணத்தில் பிளாட் எண்.199க்கான விபரங்களை அட்டவணை எண்.IIல் திருத்தம் செய்து தருமாறு மனுவை பெட்டியில் போட்டேன். அதற்கு அவர்கள் சீர்திருத்த ஆவணம் பதிவு செய்துகொள்ளுமாறு எனக்கு 07.08.2024ம் தேதியிட்டு பதில் கடிதம் அனுப்பி வைத்தார்கள். இந்த விஷயத்தை பவர் ஏஜெண்ட் அய்யப்பனிடம் தெரிவித்தபோது, அவர் என்னிடம் சீர்திருத்தம் பத்திரம் ரெடி பண்ணுங்க, நான் வந்து கையெழுத்து போட்டுவிடுகிறேன் என்று சொன்னார். எனவே, நான் எனது தம்பி அருள்தாஸ் என்பவருடன் 12.08.2024ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு சிவகங்கை எண்.1 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, சார்பதிவாளர் திரு.ஈஸ்வரனை சந்தித்து, எனது பத்திரத்தில் திருத்தம் செய்வது தொடர்பாக கேட்டபோது,

"இதுக்கு சீர்திருத்தம் பத்திரம் Document Writer-ஐ வைத்துத்தான் போடணும், உதயம் Document Writer ஆபிஸ்ல Document Writer கண்ணன்கிட்ட பத்திரத்தை கொடுங்க, அவர் மற்ற விபரம் சொல்வார்" என்று சொன்னார். உடனே பத்திர அலுவலகத்திற்கு அருகே, இராமசந்திரனார் நினைவுப்பூங்காவிற்கு பின்புறத்தில் அமைந்துள்ள உதயம் பத்திர எழுத்தகத்திற்கு சென்று அங்கிருந்த பத்திர எழுத்தர் திரு.கண்ணன் என்பவரிடம் மேற்படி விஷயத்தை தெரிவித்தேன். அவர் என்னிடம், ஆவணங்களின் நகல்களை வாங்கிக்கிட்டு, "இருங்க நான் போய் சப்ரிஜிட்ராரை பார்த்துட்டு வர்றேன்" என்று சொல்லிவிட்டு, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுவிட்டு சிறிது நேரம் கழித்து வந்து, என்னிடம் சீர்திருத்தப்பத்திரம் பதிவு செய்ய முத்திரைத்தாள் மற்றும் பதிவுக்கட்டணமாக ரூ.2000/-மும், Documentation charge ரூ.3500/-ம் ஆகும் என்றும், அதுபோக சார்பதிவாளர் ஈஸ்வரன் சீர்திருத்தம் போடுறதுக்கு பணம் ரூ.18000/- கேட்கிறார் என்றும் கூறினார். அதற்கு நான் அவரிடம், "சின்ன வேலைதானே சார், பிளாட் எண் மட்டும்தான் சேர்க்க வேண்டியிருக்கு, அளவெல்லாம் சரியாயிருக்கு, இதுக்கு இவ்வளவு செலவாகுமா" என்று கேட்டேன். அதற்கு அவர், "நீங்க வேணும்னா சப்ரிஜிஸ்ட்ரார் ஈஸ்வரன் சாரைப்பார்த்து கேட்டுங்கங்க" என்று சொன்னார். நான் சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டதனால், உடனடியாக சார்பதிவாளரை பார்க்க இயலவில்லை. அதன்பின்பு, நானும் எனது தம்பி அருள்தாஸ்-ம் கடந்த 27.08.2024ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் சிவகங்கை 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, சார்பதிவாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை சந்தித்து, சீர்திருத்தம் போட வேண்டிய விபரத்தை சொன்னபோது, உங்க Document Writer கண்ணனிடம் ஏற்கனவே சொல்லிட்டேனே என்று சொன்னார். அதற்கு நான் "பத்திரம் போடுறதுக்கு சாருக்கு ரூ.18000/- கொடுக்கணும்னு" கண்ணன் சொன்னதாக தெரிவித்தவுடன், சார்பதிவாளர் ஈஸ்வரன் எங்களிடம், "இது நடைமுறைதானே, பத்திரத்துல பிளாட் எண்ணை விட்டுவிட்டு பத்திரம் பதிந்தது உங்கள் தவறுதானே, இதுல குறைக்க முடியாது" என்று சொன்னார். நான் அவரிடம் ரூ.2000/-ஆவது குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் Document Writer கண்ணனிடம் சொல்லி Draft ரெடி பண்ணிட்டு, அவருடன் வந்து பாருங்க என்று சொன்னார். ஆகவே, நானும் எனது தம்பியும் 28.08.2024ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் Document Writer கண்ணனுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சப்ரிஜிஸ்ட்ரார் ஈஸ்வரனை சந்தித்தபோது, சார்பதிவாளர் ஈஸ்வரன் Document Writer கண்ணனை மட்டும் அருகில் கூப்பிட்டு பேசிவிட்டு, பின்னர் எங்களை கூப்பிட்டு, எல்லாத்தையும் கண்ணனிடம் சொல்லிவிட்டேன் அவருக்கிட்ட பணத்தை கொடுத்திடுங்க, பத்திரம் போட்டுறலாம் என்று

சொன்னார். அதன்பின்னர், நான் Document Writer கண்ணனிடம் "சார்பதிவாளர் சார் என்ன சொன்னாங்க" என்று கேட்டதற்கு, அவர் எங்களிடம் "சீர்திருத்தம் பத்திரம் போடுறது புதுப்பத்திரம் போடுறமாதிரிதான், இதுல குறைக்க முடியாது" என கறாராக தெரிவித்துவிட்டார் என்றும், நாளைக்கு பணம் கொடுத்தால் பத்திரம் போட்டுறலாம், நீங்க நாளைக்கு காலைல பணத்துடன் வந்துருங்க என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. சீர்திருத்த பத்திரம் போட்டுத்தர என்னிடம் பணம் ரூ.18,000/- லஞ்சம் கேட்கும் சிவகங்கை 1 எண் இணை சார்பதிவாளர் திரு.ஈஸ்வரன் மற்றும் அவருக்கு உடந்தையாக செயல்படும் ஆவண எழுத்தர் திரு.கண்ணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxx, இணைப்பு 1) சிவகங்கை 1 எண் இணை சார்பதிவக கிரைய ஆவண எண்.1528/2015-ன் நகல், 2) அல்லூர் குரூப் சர்வே எண்.32/15, 32/11, 32/16, 32/17 ஆகியவற்றிற்காக வில்லங்க சான்றின் நகல், 3) 1 எண் இணை சார்பதிவக கடிதம் ந.க.எண்.3516/ஆர்.1/2024-ன் நகல்

Sir, Received the complaint on 29.08.2024 at 09.00 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.6/2024 u/s 7(a) and 12 of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 29.08.2024 at 09.45 hrs and took up for investigation. sd.A.Kannan, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR, அசல் புகார் மனு மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A Kannan
IPSK/VAC
29/8/2024